தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1980 ஜூலை 18

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

நோய் என்ன என்று ஆராய்ந்து நோயின் காரணம் ஆராய்ந்து அது தணிக்கும் வழியினை ஆராய்ந்து உடலுக்குப் பொருந்தும் படியாகச் செய்ய வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

புதுக்கோட்டை மன்னர் கல்லூரி

*வினா எண் 16—திரு விஜய ரெகுநாத தொண்டமான் :

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் M. A., (சரித்திரம்) M. A., (கணிதம்) பிரிவுகள் எப்போது முதல் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவர் அவர்களே, அங்கே எம். ஏ. (வரலாறு), எம். எஸ்ஸி. (கணிதம்) ஆகியவை துவங்குவதற்கு இப்போது கருத்துரு எதுவும் இல்லை.

திரு. விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதுக் கோட்டையில் அந்தக் கல்லூரியிலே நூற்றாண்டு விழா கொண்டாடுவதாக இருக்கிறது. அதற்கு ஒரு ஜெஸ்ச்சராக அங்கே ஏம். ஏ. ஹிஸ்டரி, எம். காம். வகுப்புகளைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அவர்கள் இளங்கலை (ஆங்கிலம்), இளங்கலை (தமிழ்), முதுகலை (பொருளியல்) ஆகியவை துவக்கப் படவேண்டுமென்று விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். அவற்றில்

இளங்கலை (ஆங்கிலம்) பட்டப்படிப்பு வழங்க அனுமதி அளிக்கப்பட முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது நாம் புதிய வகுப்புகளைத் துவங்கும்போது பி. யு. சி. எடுத்துவிட்டதால் இந்த ஆசிரியர்களைப் பயன்படுத்துகின்ற முறையிலே ஆங்காங்கே புதிய வகுப்புகளை துவங்கி வருகிறோம். ஆகவே நமது தேவைகளையும் நிதி ஆதாரங்களையும் வைத்துக்கொண்டு நாம் மறுபடியும் பரிசீலனை செய்கிறபோது புதிய வகுப்புகள் இதுபோன்ற கல்லூரிகளிலே வரும்.

திரு. விஜயரெகுநாத தொண்டமான்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தக் கல்லூரியிலே இடம் இல்லாத காரணத்தால் காலையிலேயும் மாலையிலேயும் வகுப்புகளை வைக்கிறார்கள். மேலே கட்டுவதற்கு இடம் இருக்கிறது. இங்கே எம். ஏ. கோர்ஸுகள் கொண்டு வருவதற்கு முன்பு எக்ஸ்டன்ஷன் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே சரித்திரம் படைத்திட்ட மாமன்னர் பெயரால் அந்தக் கல்லூரி இருக்கின்ற காரணத்தினாலும் அது மாவட்டத் தலைநகராக அமைந்திருக்கின்ற காரணத்தினாலும் இந்த ஆண்டு எம். ஏ. (வரலாறு), எம். எஸ்ஸி. (கணிதம்) ஆகிய வகுப்புகள் துவங்க அனுமதி வழங்காவிட்டாலும் அடுத்த ஆண்டாவது அனுமதி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நாம் கல்லூரிகளிலே இதுபோன்ற அடிப்படையிலே வித்தியாசம் எதுவும் பார்ப்பதில்லை. மன்னர் கல்லூரியா அல்லது வேறு கல்லூரியா என்று பார்ப்பதில்லை. மாவட்ட தலைநகரிலே இருந்தாலும் அல்லது கிராமங்களிலே இருந்தாலும் ஓரே விதமான அணுகுமுறையைத்தான் கொண்டிருக்கிறோம். நான் முன்பே சொன்னதுபோல் அவர்களேகூட அந்த வகுப்புகள் வேண்டுமென்று கேட்டு விண்ணப்பிக்கவில்லை. அடுத்த ஆண்டு அந்த இரண்டுவகுப்புகள் வேண்டும் என்று அவர்கள் முயற்சி எடுப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே அவர்கள் அடுத்த ஆண்டு அப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்தால் அது பரிசீலிக்கப்படும். மேலும் இது நாம் மாத்திரம் பார்த்து செய்யக்கூடிய காரியமல்ல, அதிலே பல்கலைக் கழகத்திற்கும் பங்கு இருக்கிறது. பல்கலைக் கழகம் அதை முறையாக ஆராய்ந்து பார்த்து அவர்களும் முடிவு எடுக்க வேண்டும்.

1980 ஜுலை 18]

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே, அரசினர் கலைக் கல்லூரியிலே எம். ஏ., எம். எஸ்ஸி. வகுப்புகள் துவங்க வேண்டுமென்று சொன்னால் அந்தக் கல்லூரிகள் இத்தனை ஆண்டுகள் நடைபெற்றிருக்கவேண்டுமென்று ஏதாவது கொள்கை இருக்கிறதா அல்லது அங்கங்கே இருக்கின்ற வாய்ப்பு வசதிகளை பொறுத்து துவக்கப்படுகிறதா? விழுப்புரம் கல்லூரியிலே எம். ஏ., வகுப்பு, பி. எஸ்ஸி (மேதமேட்டிக்ஸ்) ஆகிய வகுப்புக்கள் எப்போது துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகுமார் விஜய ரெகுநாத தொண்டமான் அவர்கள் கேட்ட புதுக்கோட்டையைப்பற்றிய கேள்விக்கான அந்த விவரங்களைத் தான் என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். விழுப்புரம் கல்லூரியைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்கள் தரலாம்.

நகராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக்குழுக்கள்

* வினா எண் 17—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) நகராட்சிகளில் அமைக்கப்பட்டிருந்த ஆலோசனைக் குழுக்கள் செயல்படாமல் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றை புனரமைத்து செயல்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—

(அ) செயல்பட்டு வருகின்றன.
(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, செயல்பட்டு வருகின்றன என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இது வரைக்கும் செயல்படவில்லை. கோவை முனிசிபாலிட்டியிலே இருக்கின்ற கமிட்டியிலே என்னைக்கூட அங்கத்தினராக வைத்திருக்கிறார்கள். அங்கே என்னைக் கூப்பிடவும் இல்லை. கூட்டமும் நடக்கவில்லை, ஆகவே, செயல்பட்டு வருகின்றன என்று அமைச்சரவர்கள் சொல்வது எப்படிச் சரியாக இருக்கும் என்று புரியவில்லை. இந்தக் கமிட்டிக்கு ஏதாவது அதிகாரம் இருக்கிறதா? சட்டப்படி அதிகாரம் இல்லை என்று தெரிய வருகிறது. ஆனால் இந்தக் கமிட்டிக்கு நாங்கள் எல்லோரும்